


ஜனநாயகம் சற்று காஸ்ட்லியானது. ஜனநாயகம் சிலருக்கு ஆடம்பரமானது. ஜனநாயகம், சமயத்தில் ஆயுதங்களைக் காட்டிலும் அச்சுறுத்தக்கூடிய விஷயமாக அமைந்துவிடுகிறது. நமக்குப் பழகிவிட்டபடியால், பெரிய வித்தியாசங்கள் தெரிவதில்லை. ஆனால், தீபாவளிக்கு வாங்குகிற புதுச்சட்டை மாதிரி, அப்போதுதான் உடுத்திக்கொண்டு கண்ணாடி முன் நின்று அழகு பார்க்கிறவர்களுக்கு, மேற்படி அவஸ்தைகள் பகுதியளவிலாவது இருந்தே தீர்ந்திருக்கிறது. ஹமாஸ் விதிவிலக்கல்ல.

வரிப்பணத்தைப் பதுக்கிவைத்துக்கொண்டு, அழிச்சாட்டியத்தில் இறங்க நினைத்த இஸ்ரேலின் கணக்கு பொய்க்கவில்லை. எதிர்பார்த்ததுபோலவே, ஹமாஸ் ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே பாலஸ்தீன் தள்ளாட ஆரம்பித்தது. பொருளாதாரம் சரியத் தொடங்கியது. கஜானா காலி. பணம் இல்லை. எல்லோருக்கும் சம்பள பாக்கி. யார் வீட்டிலும் அடுப்பெரியவில்லை. எப்போது வேண்டுமானாலும் உள்நாட்டுக் கலவரம் வெடிக்கலாம்.

ஹமாஸின் தலைவர்கள் கூடி உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினார்கள். இப்போதுதான் புதிதாக அரசியல் செய்ய வந்திருக்கிறார்கள். ஒரு எல்.கே.ஜி. குழந்தைக்குரிய ஆர்வம், பதற்றம், தடுமாற்றங்கள் அனைத்தும் அவசியம் இருந்தே தீரும். இதுவே, பழைய போராளி ஹமாஸாக இருந்திருந்தால், சப்தம் போடாமல் இஸ்ரேலுக்குள் ஊடுருவி, கண்ணில் படும் இடங்களில் கண்ணி வெடி தூவிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்திருப்பார்கள். அல்லது நான்கு அமைச்சர்களைக் கடத்திக் கொண்டு வந்து, போன் செய்து மிரட்டியிருப்பார்கள்.

மேற்படி சமாசாரங்கள் இப்போதைக்குச் சாத்தியமில்லை. உலகமே கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு கண்காணித்துக் கொண்டிருக்கிறது. தவிரவும், ஆட்சிக்கு வந்த பிறகு எழுந்துள்ள முதல் பெரும் பிரச்னை இது. ஆயுதம் தூக்காமல், ஆள் வைத்து அடிக்காமல் சமாளிப்பதுதான் நல்ல பிள்ளைக்கு அழகு. இஸ்ரேலின் எண்ணம் என்ன? ஹமாஸுக்கு ஆளத் துப்பில்லை என்று காட்டவேண்டும். சர்வதேச நிர்ப்பந்தங்களைத் திணித்து, அவர்களை ஆட்சியை விட்டு அகற்றவேண்டும். அப்புறம் தன்னிஷ்டத்துக்கு ஒரு பொம்மை அரசு சாத்தியமானால் யதேஷ்டம்.

அது கூடாது என்பதால்தான், ஹமாஸ் தலைவர்கள் - குறிப்பாக காலீத் மஷால் மற்றும் இஸ்மாயில் ஹனியா, ஆயுத வாசனையில்லாத அறவழி குறித்துத் தீவிரமாக யோசித்தார்கள்.

இரண்டு விஷயங்களை உடனடியாகச் செய்யவேண்டும். முதலில், அரசாங்க அதிகாரிகளை அமைதிப்படுத்தவேண்டும். பிறகு, மக்களை. இரண்டாவதாக, பணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இஸ்ரேல் உதவாதபட்சத்தில், வேறு எதாவது மாற்று ஏற்பாடு.

ஆகவே, அவர்கள் முதலில் அரசாங்க அதிகாரிகளை அழைத்துப் பேசினார்கள்.

'கவலைப்படாதீர்கள். இது ஒரு சிறிய பிரச்னைதான். இஸ்ரேல் நம்மை வம்புக்கு இழுக்கிறது. நம் ஒற்றுமையைக் குலைக்க விரும்புகிறது. உங்களைத் தூண்டிவிட முயல்கிறது. பதற்றப்படாதீர்கள். பயப்படாதீர்கள். உங்கள் சம்பளம் உங்களுக்குத்தான். இன்று இல்லாவிட்டால் நாளை. நாளை இல்லாவிட்டால் மற்றொரு நாள். உலக நாடுகளிடம் துண்டேந்தி வசூலித்தாவது உங்கள் சம்பளக் கணக்கு செட்டில் செய்யப்படும்.' அதிகாரிகள் என்றாலும் அவர்களும் அரபுகளே அல்லவா? ஹமாஸ் பட்டுக்கொண்டிருந்த கஷ்டம் புரியாமலா இருக்கும்? ஆகவே, ஒப்புக்கொண்டார்கள்.

அடுத்து, மக்களிடம் பேசினார்கள். 'பாலஸ்தீன மக்களே, கவலை வேண்டாம். இஸ்ரேலுக்கு எதிரான நமது போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கும். அத்தனை முட்டுக்கட்டைகளையும் முறியடிப்போம். அதுவரை அமைதி காக்க. பொறுமை காக்க. இன்னும் எதெல்லாம் முடியுமோ, அத்தனையும் காக்க.'

நிறையப் பேசினார்கள். நிறைய மீட்டிங் போட்டார்கள். டி.வி.யில் தோன்றினார்கள். ரேடியோவில் தோன்றினார்கள். பத்திரிகைகளில் எழுதினார்கள். ஒரு தலைகூட வெளியே தெரியாத ஹமாஸா இது? யாராலும் நம்பமுடியவில்லை. உண்மையில், ஹமாஸின் பல முக்கிய முகங்கள் வெளி உலகத்துக்குத் தெரியவந்ததே இந்தக் காலகட்டத்தில்தான். அவர்கள் எப்படிப் பேசுவார்கள், எங்கே உள்ளத்தைத் தொடுவார்கள், எங்கே உணர்ச்சிகளைத் தொடுவார்கள் என்பதெல்லாம் சி.டி, சி.டி.யாக ப்ரிண்ட் போடப்பட்டு, உளவுத்துறைகளுக்குப் போய்க்கொண்டிருந்தன.

ஆனால், ஹமாஸுக்கு உதவ யார் முன்வருவார்கள்? ஆயிரம் இரண்டாயிரம் கைமாத்து என்றால் சரி. இது கோடிகள் அல்லவா? அதுவும் ஒரு வருஷ பட்ஜெட்டுக்குரிய பணம் அல்லவா? யாரும் உதவமாட்டார்கள் என்றுதான் இஸ்ரேல் நினைத்தது.

ஆனால், மிகச் சரியாக அந்தச் சமயத்தில், யாரும் எதிர்பாராத விதத்தில் வந்து சேர்ந்தது உலக வங்கியின் ஓர் அதிரடி ரிப்போர்ட். மே 2006-ல் வெளியிடப்பட்ட அந்த ரிப்போர்ட்டின் சாராம்சம் இதுதான்: இஸ்ரேல் செய்வது சரியல்ல. ஹமாஸைத் தண்டிக்கிறோம் பேர்வழி என்று அவர்கள் இம்சிப்பது அப்பாவி பாலஸ்தீனர்களைத்தான். அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய வரிப்பணத்தை நிறுத்தி வைப்பதற்கு, இஸ்ரேலுக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. ஒழுங்கு மரியாதையாக பணத்தைத் திரும்பக் கொடுக்கவும்.

இஸ்ரேல் இதனை எதிர்பார்க்கவில்லை. இந்த உலக வங்கி, ஐ.நா எல்லாம் எப்போது சும்மா இருக்கும், எப்போது திருவாய் மலரும் என்று சொல்லமுடியாது. என்னத்தையாவது இந்த மாதிரி சொல்லிவைத்துவிட்டுப் பின்னாலேயே தீர்மானம் போட பென்சிலைக் கூராக்கிக்கொண்டு ரெடியாக நிற்பார்கள். ஏதாவது இசகுபிசகாகிப் போனால், உடனே எதற்காவது தடை போடுவார்கள். பொருளாதாரத் தடைகள். புடலங்காய்த் தடைகள். இடத்தைவிட்டு எழுந்திருக்காத சுல்தான் மாதிரி. உட்கார்ந்தவாக்கில் உத்தரவிடும் சக்கரவர்த்தி மாதிரி.

இஸ்ரேலுக்கு நெருக்கடிகள் அதிகரிக்க ஆரம்பித்தன. 'உலக வங்கி சொல்வது சரிதான். வரிப்பணத்தைத் திருப்பித் தா' என்றது ரஷ்யா. பத்திரிகைகள் உதவிக்கு வந்தன. இஸ்ரேலின் கொடுமையால் பாலஸ்தீனர்கள் படும் அவதிகளைப் படம் பிடித்துக் காட்டின. நார் நாராகக் கிழித்தன.

சந்தேகமில்லாமல் நிர்ப்பந்தத்தின்பேரில், மூக்கால் அழுதுகொண்டேதான் பணத்தைக் கொடுத்தது இஸ்ரேல். சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது ஹமாஸ். 'அட பரவாயில்லையே! உருப்படாத அமைப்பு என்று நினைத்துக்கொண்டிருந்த உலக வங்கியால் கூட உபயோகம் இருக்கிறதே.'

அதுதான் சந்தர்ப்பம் என்று காத்திருந்த இரான், சடாரென்று 'பாலஸ்தீன் அத்தாரிடிக்கு வெளிப்படையாக உதவ நான் ரெடி' என்று முன்னால் வந்து நின்றது.

யார்? தீவிரவாத இயக்கமாக இருந்த காலம் முதல் ஊட்டி வளர்த்த இரான் அரசு. ஹமாஸ் ஆளத்தொடங்கியபோது மட்டும் அவர்கள் சும்மா இருப்பார்களா? சொந்தச் சகோதரர்கள் அல்லவா? 'பணம்தானே பிரச்னை? இந்தா எடுத்துக்கொள். எவ்வளவு வேண்டும் என்று மட்டும் சொல்.' புன்சிரிப்புடன் இரான் அன்பளித்த தொகை 120 மில்லியன் டாலர்கள். கடன் என்றுதான் அதற்குப் பெயர். ஆனால், பாலஸ்தீன் தன்னிறைவடைந்து கடனை அடைக்கிற காலம் எப்போது வரும்? அதுவா முக்கியம்? துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இறங்குவது மட்டுமல்லவா முக்கியம்? அள்ளிக்கொடுத்துவிட்டு அரவணைத்து மகிழ்ந்தது இரான்.

இரானுக்கு இன்றைய தேதியில் இருக்கிற நெருக்கடிகள் சற்று விசேஷமானவை. மத்தியக் கிழக்கில் அமெரிக்கா குறிவைத்திருக்கும் அடுத்த தேசம் அது. சவூதி அரேபியா, குவைத், இராக் என்று ஒரு பெரிய ரவுண்டு வந்துவிட்ட பிறகு, இரானின் எண்ணெய் வளம்தான் அமெரிக்காவுக்கு இந்தப் புத்தாண்டுக் கனவு. ஏற்கெனவே இரான் அணு ஆயுதங்கள் தயாரிக்கிறது, அணில் சேமியா தயாரிக்கிறது என்று கடந்த இரண்டு வருடங்களாக அவ்வப்போது, என்னத்தையாவது சொல்லிக்கொண்டேதான் இருக்கிறார்கள். இதெல்லாம் ஆழம் பார்க்கிற நடவடிக்கைகள். எப்படியும் யுத்தம் என்று ஒன்று வரத்தான் போகிறது என்பது இரானுக்குத் தெரியும். யுத்தமில்லாமல் எண்ணெய் இல்லை என்பது அமெரிக்காவுக்கும் தெரியும்.

அப்படியொரு சூழல் வரும்போது, அமெரிக்காவுக்கு அங்கே எப்போதும்போல் இஸ்ரேல்தான் ராணுவத் தளம். இரானுக்கு? சவூதி உதவாது. குவைத் உதவாது. இராக் இல்லை. ஜோர்டன் வராது. சிரியாவை நம்பமுடியாது. லெபனான் உதவும். இரானைப் போலவே ஷியா தேசம். ஹிஸ்புல்லாக்கள் தோள் கொடுப்பார்கள். வேறு?

அவர்கள் பாலஸ்தீனியர்களைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். ஓர் ஆத்திர அவசரத்துக்குக் குரல் கொடுத்தால் ஓடிவந்து உதவி செய்ய, அங்கே வேறு நாதி கிடையாது. ஹமாஸும் சரி, பி.எல்.ஓ.வின் உறுப்பு இயக்கங்களும் சரி, ஒவ்வொரு காலகட்டத்திலும் இரானால் பல்வேறு விதங்களில் போஷிக்கப்பட்டிருக்கின்றன. பணமாக, ஆயுதங்களாக, போர்ப் பயிற்சிகளாக நிறையச் செய்திருக்கிறார்கள். எண்ணெய்க் கனவுடன் ஆட்டத்தில் இறங்கினாலும், அமெரிக்கா சொல்லப் போகிற குற்றச்சாட்டு வரிசையில் இதுதான் முதன்மையானது.

ஆனால், அதெல்லாம் ஒரு காலம் அல்லவா? ஹமாஸ் இப்போது ஆளும் கட்சி. ஜனநாயகத்தை நம்பி ஏற்றுக் கொண்டிருக்கிறது. உதவினால் என்ன தவறு? காலம் மாறும். எல்லாரும் மாறுவார்கள். ஹமாஸும் மாறலாம். தவறில்லையே? இரானின் வாதம் அமெரிக்க நியாயங்களுடன் ஒருபோதும் பொருந்தாதவை. அதனால்தான், அடுத்த மண்டகப்படி இரானில் இருக்கும் என்று உறுதியாகச் சொல்லத் தோன்றுகிறது.

இஸ்ரேலின் கவலை இதுமட்டுமல்ல. சோவியத் யூனியன் என்கிற அமைப்பு சிதறி, உலக விவகாரங்களிலிருந்து ரஷ்யா பெருமளவு ஒதுங்கிவிட்ட பிறகு, முதன்முதலாக இப்போதுதான் வெளிப்படையாக ஒரு வெளிநாட்டு விவகாரத்தில் தலையிடத் தொடங்கியிருக்கிறது. பாலஸ்தீன் அரசியலில் ரஷ்யா ஆர்வம் காட்டத் தொடங்கியது இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்கும் உண்மையிலேயே மிகப்பெரிய வியப்பு. வியப்பு மட்டுமல்ல, அதிர்ச்சியும் கூட. திட்டம் என்னவாக இருக்கும்? புரியவில்லை. குழப்பம். விளாடிமிர் புதினுக்கு உள்ளூர் தீவிரவாதிகள், வேலைவாய்ப்பின்மை, உற்பத்திக் குறைச்சல் என்று நிறையப் பிரச்னைகள் உண்டு. அதையெல்லாம் விட்டுவிட்டு, பாலஸ்தீன்மீது ஏன் திடீர் அக்கறை? அதுதான் புரியவில்லை.

பாலஸ்தீனியர்களுக்குப் புரியாத விஷயம் வேறு. அவர்கள் ஹமாஸை ஆளும் கட்சியாக அமர்த்தியதன் காரணம் மிக வெளிப்படையானது. ஒரு வீரமுள்ள தலைமையை அவர்கள் எதிர்பார்த்தார்கள். அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக, அவர்கள் மிகத் தீவிரமாக இஸ்ரேலால் பாதிக்கப்பட்டவர்கள். அடுத்தடுத்த யுத்தங்களில் அமைதியை இழந்தவர்கள். பாலஸ்தீன் அத்தாரிடி உருவாகி, முதலில் பி.எல்.ஓ.வும் பிறகு, இப்போது ஹமாஸும்

ஆளத்தொடங்கியும் அன்றாட வாழ்வில் பெரிய மாற்றங்கள் இல்லையே என்கிற ஏமாற்றம் அவர்களுக்கு.

எதற்காக அவர்கள் பி.எல்.ஓ.வை தீவிரமாக இயங்குவீர்கள் என்றுதானே உங்களைத் தேர்ந்தெடுத்தோம். இஸ்ரேலைக் கடுமையாக எதிர்ப்பீர்கள் என்று நம்பினோம். நீங்கள் எதிர்க்கிறீர்கள். இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், உங்கள் எதிர்ப்பில் நாங்கள் எதிர்பார்த்த வலிமை இல்லை. வரிப்பணத்தைத் தரமாட்டோம் என்று இஸ்ரேல் கைவிரித்தபோது, நீங்கள் சும்மாவே இருந்ததன் காரணம் என்ன?

சம்மட்டியாக அடிக்கும் கேள்விகள். ஹமாஸுக்கு அப்போதுதான் புரிந்தது. ஜனநாயகம் மிகவும் கஷ்டமானது. மக்களின் கேள்விகள், ஏ.கே. ரக துப்பாக்கிகளைக் காட்டிலும் வீரியமானவை. கொடியும் கோஷமும் ராக்கெட்டுகளைக் காட்டிலும் உக்கிரமாகப் பறந்து சென்று தாக்கக் கூடியவை. ஆகவே, வாரிச் சுருட்டிக்கொண்டு களத்தில் இறங்கினார்கள்.

2006-ம் ஆண்டு பாலஸ்தீனின் ஆளும் சக்தியாகக் களமிறங்கிய ஹமாஸ் முன்னால், இரண்டு கேள்விகள்தான் இருந்தன. ஆட்சியா? ஆயுதமா? ஒன்றிருந்தால் இன்னொன்றுக்கு வேலை இருக்காது. இது முடிவெடுக்கவேண்டிய தருணம். என்ன செய்யப்போகிறார்கள்?